# எட்டாம் அத்தியாயம்

அர்ஜுனன் வினவுகிறான்—"கண்ணா!கைவல்யம் என்ற புருஷார்த்தத்தை விரும்புகிறவன்,ப்ரஹ்மம்,அத்யாத்மம்,கர்மம் இவற்றை அறிய வேண்டும் என்று கூறினாயே,அவற்றைப் பற்றி விளக்கமாகக் கூறு" என்றான்.

பகவான்—அர்ஜுன!கைவல்யம் என்பது பிரகிருதி ஸம்பந்தமற்றதான அதாவது பரிசுத்தமான ஜீவாத்ம ஸ்வரூபத்தை அநுபவிப்பதுதான்.இங்கு ப்ரஹ்ம சப்தம் பரமமான அக்ஷரத்தை அதாவது ,பிரகிருதியைவிட மிகவும் மேம்பட்டவனாயும் பிரகிருதி ஸம்பந்தமற்றவனாயும் இருக்கும் ஜீவனைத்தான் குறிப்பிடுகிறது. அக்ஷரம்,ப்ரஹ்ம என்ற சொற்கள் உபனிஷத் முதலியவற்றில் ஜீவ விஷயமாகவும் பிரயோகிக்கப் பெற்றிருக்கின்றன.ப்ரஹ்மம்—பெரியது,ஜீவனும்—அறிவால் பெரியவன் தான் அக்ஷரம்—அழிவற்றது,ஜீவனுக்கும் அழிவு கிடையாதே

பரிசுத்த ஆத்மஸ்வரூபாநுபவமாகிற கைவல்யத்தை விரும்புகிறவன்,அந்த ஆத்மஸ்வரூபத்தையே அறியாமல் இருந்தால் ,அதில் உள்ள போக்யதை அவனுக்கு எப்படித் தெரியும்?அது தெரியாமற்போனால் அதைப் பெறுவதற்கான உபாயத்தில் ஏன் இழிகிறான்?

அர்ஜுனன்—"வாஸுதேவ!அத்யாத்மம் என்பது என்ன?அதைப்பற்றி எனக்கு விளக்கிக் கூறு" என்றான்

வாஸுதேவன்—"பார்த்த!அத்யாத்மம் என்பது ஸ்வபாவம் அதாவது பிரகிருதி. அத்யாத்மம்—ஆத்மாவில் ஸம்பந்தம் பெற்றது.அதனாலேயே அது வேறு என்பது தெளிவு.பூமி,ஜலம்,தேஜஸ்,வாயு,ஆகாசம் என்ற ஐந்து பூதங்களின் ஸூக்ஷ்ம அம்சத்தையும் அதனால் ஸம்பவிக்கும் அஜ்ஞானம் முதலியவற்றையுமே அத்யாத்மம் என்ற சொல் குறிக்கிறது" என்றான்.

அர்ஜுனன்—"கிருஷ்ண!கர்மம் என்பது என்ன?அதைப் பற்றியும் எனக்குத் தெளிவாகக் கூறு?" என்றான்

பகவான் விவரிக்கிறான்—கௌந்தேய!கர்மம் என்பது ரேதஸ்ஸின் விஸர்கம்—விடுதல்தான். மனித சரீரம் முதலியவற்றுக்குக் காரணம் அவரவர் தகப்பனாருடைய வீர்யமே.அது அவரவர் தாய் வயிற்றில் சென்று சரீரமாக உருவெடுக்கிறது.

விஜயன்—எம்பெருமானே!கைவல்யம் என்ற பலனை விரும்புகிறவன் தன் ஸ்வரூபத்தை உணர்த்தல் மிகவும் ஆவச்யகமானதே.பஞ்சபூதங்களின் ஸூக்ஷ்ம அம்சத்தைப் பற்றியும் ரேதோவிஸர்கம் என்ற செயலைப் பற்றியும் எதற்காக அவன் அறிய வேண்டும்?

பகவான்—பார்த்த!ஆத்மஸ்வருபத்தை நாம் அறிய அறிய அதன் சிறப்புத் தெரியும். அதனால் அதில் ஆசை வரும்.அதை பெறுவதற்கான உபாயத்தைச் செய்வோம். நாம் எங்கே போனாலும் தொடரும் ஐம்பூதங்களின் ஸூக்ஷ்ம அம்சம், அதனால் ஏற்படும் அஜ்ஞானம் நம் உடலுக்குக் காரணமான வஸ்து இவற்றைப் பற்றிய உண்மை நிலையை நாம் நன்றாக அறிந்தோமானால் அவற்றிலுள்ள தோஷங்களையெல்லாம் நமக்கு விளங்கும்.உடனே அவற்றை விட்டொழிக்க வேண்டும் என்று த்வரை ஏற்படும்

ஆத்மாவைப் பற்றி அறிவது அதன் பெருமையை அறிந்து அதைப் பெறுவதற்காக, அத்யாத்மம்,கர்மம் இவற்றை அறிவது,அவற்றிலுள்ள தோஷங்களை உணர்ந்து அவற்றையும் அவற்றினால் உண்டானதையும் விடுவதற்காக சாந்தோக்யத்திலுள்ள பஞ்சாக்னி வித்தையில் இந்த விஷயங்கள் மிகத் தெளிவாக உபதேசிக்கப் பெற்றுள்ளன.

அர்ஜுனன்—"கண்ணா!ஐச்வர்யத்தை விரும்புகிறவன் ,அதிபூதம்,அதிதைவம் ஆகிய இரண்டையும் அறிய வேண்டும் என்று கூறினாயே;அவற்றில் அதிபூதம்

என்பது எது?அதைப் பற்றி விளக்கு" என்றான்.

பகவான்–அர்ஜுன!ஐச்வர்யம் என்பது சிறந்த ரூப ரஸாதிகளின் அநுபவமே. அதிபூதம் என்ற இடத்திலுள்ள "பூத"சப்தம்,பூமி முதலிய ஐந்து பூதங்களையே குறிக்கிறது. அதிபூதமாவது–பஞ்சபூதங்களிலுள்ள ரூபம்,ரஸம், கந்தம்,ஸ்பர்சம்,சப்தம் முதலியனவே. ரூபாதிகளை அவற்றின் ஆச்ரயங்களான பஞ்ச பூதங்களை விட்டுத் தனித்து அநுபவிக்க முடியாதே. மிகச் சிறந்த பொருள்களை அநுபவிக்க விரும்புகிறவன்,ரூபரஸாதிகளில் எவை சிறந்தவை என்பதை அறியாமற்போனால் அவற்றை எப்படி விரும்புவான்?தற்சமயம் நாம் அநுபவிக்கும் போக்கியங்களைவிட ,பகவானை உபாஸித்து பெரும் போக்கியங்கள் மிகச் சிறந்தவை என்ற எண்ணம் ஏற்பட்டால்தான் அவற்றை விரும்புவான்.

'க்ஷரோ பாவ:' என்பதற்கு மாறுபடக்கூடியதாயும் அதனாலேயே அழியக்கூடியதாகவும் இருக்கும் பஞ்சபூதங்களும் அவற்றிலுள்ள குணங்களும் என்று பொருள். இந்தப் ப்ரகிருதி மண்டலத்தில்,பகவதுபாஸனத்தால் மிகச் சிறந்த போக்கியங்களைப் பெற்றாலும் அவையும் சாச்வதமன்று என்று கருத்து.

விஜயன்–'அதிதைவதம்' என்பது என்ன?அதையும் உபதேசிக்கவும்

பகவான்–பண்பாளா!பிரம்மா முதலிய மற்றத் தேவர்கள் தர முடியாத மிகச் சிறந்த போக்கியங்களை அநுபவிக்கும் நிலையே அதிதைவதம். "புருஷ:" என்பதற்கு "பிரம்மா முதலிய மற்ற எந்தத் தேவர்களாலும் பெற முடியாத ஐச்வர்யத்தை அநுபவிக்கும் புருஷனாக அதாவது அதிகாரியாக இருத்தல்" என்று பொருள். பகவதநுக்ரஹத்தால் பெறப்போகிற அதன் சிறப்பை உணர்ந்தால்தானே அதில் ஆசை வரும். அதைப் பெற பகவானை உபாஸிப்பான்.

கௌந்தேயன்–பரமபுருஷனே!கவலயத்தை விரும்புகிறவன்,ஐச்வர்யத்தை விரும்புகிறவன், மோக்ஷத்தை விரும்புகிறவன் ஆகிய மூவருமே அவசியம் அறிய வேண்டியதாகக் கூறிய அதியஜ்ஞும் என்பது யாது?

பரந்தாமன்–அர்ஜுன!'அதியஜ்ஞ' சப்தத்தால் குறிப்பிடப்படுகிறவன் நானே. எல்லா யஜ்ஞாதிகளாலும் ஆராதிக்கபெறுபவன் நானே. பிரமன் முதலியவர்களைக் குறித்து யாகாதிகளைச் செய்பவன் கூட என்னையே ஆராதிக்கிறான். பிரம்மாதி தேவர்கள் என்னுடைய உடல். எல்லோருக்கும் நான் அந்தர்யாமி. எனக்குச் சரீரமான பிரம்ம,ருத்ராதிகளைக் குறிக்கும் சொல்லை சொல்லி ஆஹுதி செய்தால்கூட நான் தான் அவற்றைப் பெறுகிறேன். ஆகையால் மூன்று அதிகாரிகளும் தங்களுக்கு ஏற்பட்ட யாகயஜ்ஞாதிகளைச் செய்யும்பொழுது இந்த விஷயத்தை அறிந்து அவற்றைச் செய்ய வேண்டும்.

அர்ஜுனன்–மதுஸூதன!இந்திராதி தேவதைகளை உனக்குச் சரீரமாகக் கூறுகிறாயே;அவர்கள் ஆத்மாக்கள் அல்லரோ?உலகத்தில் காண்கிற சரீரங்கள் மாதிரி அவர்கள் இல்லையே?

கோவிந்தன்–உலகில் அனைவருக்கும்தான் சரீரம் இருக்கிறது. ஆனால் உன் உடல் போல் அவை இல்லையே. உன் உடல் பரம ஸாத்துவிகமானது. உனக்கு நல்ல விஷயத்தில் பிரவிருத்தியை உண்டு பண்ணிற்று. என்னிடம் சரணாகதி செய்து,உபனிஷத்ஸாரங்களை எல்லாம் கேட்கும் பாக்கியம் கிட்டியிருக்கிறது?மற்றவர்கள் சரீரங்களைவிட உன் சரீரம் வேறுபட்டிருக்கிறது. என் சரீரமும் விலக்ஷணமானது. ஆத்மாக்கள்கூட எனக்குச் சரீரங்கள்தாம். நான் தாங்குகிறேன். நானே நியமிக்கிறேன். நானே அவர்களுக்கெல்லாம் ஆத்மா.

அர்ஜுனன்–"கண்ணா! நீயே அதியஜ்ஞனம் என்றாய். ஆனால் ஏழாம் அத்தியாயத்தின் முடிவில் "அதியஜ்ஞத்துடன் கூடினவனாக என்னை அறிய வேண்டும்" என்றாயே;'ஸாதியஜ்ஞம்' என்பதற்கு அதுதானே பொருள்? அதியஜ்ஞமாகவும், அதியஜ்ஞத்துடன் கூடினவனாகவும் நீயேஎப்படி இருக்க முடியும்? "என்றான்.

பகவான்–பாண்டவ!யாகாதிகளைச் செய்யும்பொழுது அந்த அந்தத் தேவதைக்கு அந்தர்யாமி, பகவானாகிற நானே என்று அறிந்தே அவற்றைச் செய்ய வேண்டும். அத்துடன் என்னை உபாஸிக்கும் வகையிலும் அறிய வேண்டும் என்ற இரண்டு நிலைகளை உணர்த்தவே இவ்விதம் கூறினேன்.

அர்ஜுனன்–"கண்ணா!மூன்று அதிகாரிகளும் அந்திம காலத்தில் உன்னையே நினைக்க வேண்டும் என்றாயே; அதனுடைய பலன் யாது?யார் யார் எப்படி நினைக்க வேண்டும்?அதனுடைய பலனை முதலில் கூறு" என்றான்.

கண்ணன்–பக்தனே!கடைசிக் காலத்தில் என்னை எவ்விதம் நினைக்கிறானோ, அது போன்ற ஆகாரத்தைப் பெறுகிறான். யாரும் நானாகவே ஆக முடியாது. என்னைப் போன்றதொரு தன்மையைத்தான் பெறலாம். கடைசிக்காலத்தில் எந்தப் பொருளை நினைத்து உயிரைவிட்டாலும், அடுத்த ஜன்மத்தில் அந்தப் பொருளைப் போலவே ஆவான். அந்திம ஸமயத்தில் மானை நினைத்த பரதர் அந்த மானைப் போன்றதான மான் சரீரத்தையே அடுத்த ஜன்மத்தில் பெற்றார். எவன் எப்பொழுதுமே எதை நினைத்துக் கொண்டிருக்கிறானோ அவனுக்கு கடைசிக் காலத்தில் அதன் நினைவுதான் வரும். சரணாகதன் மற்றக் காலங்களில் எதை நினைத்துக் கொண்டிருந்தாலும் கடைசிக் காலத்தில் அவனுக்கு என் நினைவுதான் வரும். அவன் விஷயத்தில் மாத்திரம் நான் செய்யும் விசேஷ அநுக்கிரகம்தான் அதற்குக் காரணம் கடைசிக் காலத்தில் உனக்கு என் நினைவு வரவேண்டுமெனில் எப்பொழுதும் என்னையே அன்புடன் நினைக்க வேண்டும். என் நினைவுக்கு வாய்ப்பு ஏற்படுத்தக்கூடிய வர்ணாச்ரமதர்மங்களையும் ஸாத்துவிக த்யாகத்துடன் செய்ய வேண்டும்

அர்ஜுனன்–"கண்ணா!ஐச்வர்யத்தை விரும்புகிறவன் உன்னை எப்படி உபாஸிக்க வேண்டும்?கடைசிக் காலத்தில் எங்கு எப்படி நினைக்க வேண்டும்?" என்றான்.

பகவான்–விஜய!ஸர்வஜ்ஞன், அனாதிபுருஷன், எல்லாவற்றையும் நியமிப்பவன். ஸூக்ஷ்மமான ஜீவனைக் காட்டிலும் ஸூக்ஷ்மமானவன், யாவற்றையும் படைத்தவன், இப்படிப்பட்டவன் என்று மனத்தாலும் நினைக்க முடியாதவன், அப்ராதிக்ருதமான திருமேனியுள்ளவன் என்று என்னை அநவரதம் உபாசிக்க வேண்டும். யோககாலம் தவிர மற்றக்காலங்களிலும் என் திருமேனி முதலியவற்றைச் சிந்திக்க வேண்டும்.

பக்தியுடன் கூடிய யோகபலத்தால் சஞ்சலமற்றதான மனத்தால் கடைசிக் காலத்தில் இரண்டு புருவங்களுக்கு நடுவில் ப்ராணனை ஸ்தாபித்து அங்கே, கீழே சொன்ன வண்ணம் பரம புருஷனை நினைப்பவன் அவனைப் போல், சிறந்த ஐச்வர்யம் பெறுவான். தேவதாந்தரங்களிடமிருந்து பெற முடியாத ஐச்வர்யத்தைப் பெறுவான்.

அர்ஜுனன்–"பரம புருஷ!பரிசுத்த ஆத்மாநுபவமாகிய கைவல்யத்தை விரும்புகிறவன் உன்னை எப்படி உபாஸிக்க வேண்டும்?அவன் அந்திம காலத்தில் உன்னை எப்படி நினைக்க வேண்டும்?

பகவான்–விஜய!வேதவித்துக்கள், "அக்ஷர சப்தத்தால் கூறப்பெறும் பிரம்மம் பருத்ததுமன்று, சிறுத்ததுமன்று;நெட்டையுமன்று, குட்டையுமன்று" என்றெல்லாம்" கூறுகின்றனர். காம க்ரோதங்களற்ற ஸந்நியாஸிகள் அதை அடைகின்றனர். யதிகள் அதை அடைய விரும்பிப் புலனடக்கம் செய்கின்றனர்.

எப்பொழுதும்"ஓம்" என்ற ஓர் எழுத்தை உச்சரித்துக்கொண்டு,அதன் பொருளாய் அக்ஷரசப்த வாச்யனுமான என்னையும் ஸ்தா தியானிக்க வேண்டும். அறிவுக்கு வழிகளான காது முதலிய இந்திரியங்களை அவற்றுக்கு விஷயங்களான சப்தம் முதலியவற்றில் செல்லாமல் அடக்கி,மனத்தை ஹ்ருதய கமலவாஸியான என்னிடத்திலேயே செலுத்தி என்னையே தியானிக்க வேண்டும். கடைசிக் காலத்தில் தனது யோக பலத்தால் பிராணனைத் தலையில் வைத்து,என்னை நினைத்து தேகத்தைவிட்டு புறப்பட வேண்டும். இவ்விதம் செய்பவன் என்னைப் போன்றதான தன் ஸ்வரூபத்தை மாத்திரம் அநுபவிப்பான்.

அர்ஜுனன்–"வாஸுதேவா!உன்னையே விரும்பும் ஜ்ஞானி உன்னை எப்படி உபாஸிக்க வேண்டும்?அவன் உன்னை அடையும் பிரகாரம் என்ன?" என்றான்

வாஸுதேவன்–விஜய!என்னிடத்திலுள்ள அபாரமான பிரீதியினால்,க்ஷணகாலம் என் நினைவு இல்லாமற் போனாலும் தாங்கொணாத நிலையை அடைகிறான் ஜ்ஞானி. என்னுடனேயே கூடியிருக்க விரும்புகிறான் அவன். அவன் மனம் மற்றவற்றில் செல்வதில்லை. தினமும் என்னையே தியானிக்கிறான். இப்படிப்பட்டவன் என்னை அடைகிறான். கைவல்யத்தை மாத்திரமோ,கேவல ஐச்வர்யத்தை மட்டுமோ பெறமாட்டான்.

அர்ஜுனன்–"கண்ணா!உன்னைத் தியானிப்பவன் எப்படித் தியானிக்க வேண்டும்,எந்த எந்தக் குணங்களுடன் தியானிக்க வேண்டும்?" என்றான்

கண்ணன்–"அர்ஜுன!இந்த விஷயங்களையெல்லாம் உபநிஷத்,ப்ரஹ்ம்மஸூத்ரம் இவற்றைப் பெரியவர்களிடம் அடிபணிந்து கேட்டுத் தெரிந்துகொள்"என்றான்

அர்ஜுனன்–"கிருஷ்ணா!ஐச்வர்யத்தை விரும்புகிறவன்,கைவல்யத்தை விரும்புகிறவன்,உன்னையே விரும்புகிறவன் ஆகிய இந்த மூவருக்குக் கிடைக்கும் பலனில் அழியாதது எது?"என்றான்

பகவான்–பக்தனே!ஐச்வர்யம் அழியும். பிரமனின் லோகம் உட்பட எல்லா உலகங்களும் ஒரு கால விசேஷத்தில் அழியும். அங்குள்ள தேவதையும் அழியும். அங்கே சென்றவனும் அழிவான். அதாவது கிடைத்த பலனை இழந்து பூமிக்குத் திரும்புவான். என்னை அடைந்தவன்,துக்கத்தையே விளைவிப்பதும்,நச்வரமுமான பிறவியை அடைய மாட்டான்.

அர்ஜுனன்–"கோவிந்தா!சதுர்முகனும் அழிந்து அவன் பதவிகூடவா போய்விடும்? அது எப்பொழுது போகும்?

கோவிந்தன்–"பாண்டவ!பிரமனுக்கு நூறு வயதுதான். இரண்டாயிரம் நாலு யுகங்கள் என்பது அவருக்கு ஒரு அஹோராத்திரம். அந்தக் கணக்கில் அவர் நூறு வருஷம் வாழ்கிறார். அவருடைய ஆயுஸ்ஸுக்குப் "பரம்" என்று பெயர். அவருக்கு இரவு வரும் ஸமயம். பூ;புவ:,ஸுவ: என்ற மூன்று உலகங்களும் அழிந்துவிடும். பகல் வரும்பொழுது உண்டாகும்,மூன்று உலகிலுமுள்ள ஜீவராசிகள் அவருடைய இரவுவேளயில் அவருடைய சரீரத்தில் ஒட்டிகொண்டு இருப்பர். அவருடைய பகலின் தொடக்கத்தில்,அவருடைய சரீரத்திலிருந்து உண்டாவர்" என்றான்.

விஜயன்–"மணிவண்ணா!ஐச்வர்யத்தை பெற்றவனின் பலன் அழியும்,ஜ்ஞானிக்குக் கிடைக்கும் பலன் அதாவது மோக்ஷம் அழியாது என்பதைத் தெரிந்து கொண்டேன். ஆத்மாநுபவமாகிற கைவல்யத்தைப் பெற்றவனின் நிலை என்ன?" என்றான்.

மாதவன்–பார்த்த!அசேதனமான பிரகிருதியைக் காட்டிலும் ஜீவன் மிகவும் மேம்பட்டவன். அது ஜடம்,இவன் அஜடம்,அதற்கு ஸ்வரூபத்தில் விகாரம் உண்டு. இவனுக்கு அது கிடையாது. அவ்யக்தம்–கண்ணுக்குப் புலப்படாதவன் என்றும், அக்ஷரம்–அழியாதவன் என்றும் ஜீவனை வேதம் முதலிய பிரமாணங்கள் கூறுகின்றன.

இவன் பரமாத்மஞக அதாவது பரமாத்ம சரீரமாகத் தன்னே தியானம் செய்தால், பிரகிருதி மண்டலத்திலேயே ஒரு ஸ்தானவிசேஷத்தில் தன் அனுபவ மாத்திரத்தைப் பெற்று அதன் முடிவில் வைகுண்டம் சென்றுவிடுகிருன். இவன் மறுபடி பிறக்கமாட்டான். பகவானேப் பரிபூர்ணமாக அநுபவித்துக் கொண்டு அங்கேயே சாச்வதமாக வாழ்வான். இவனுக்குப் 'பஞ்சாக்னிவித்யாநிஷ்ட கேவலன்" என்று பெயர்.

(தென் கலை, வடைகலை ஸம்பிரதாயங்களில் அபிப்பிராய பேதம் காண்கிறது. ஆசார்யர்களிடம் கேட்டு அவரவர் ஸம்பிரதாயப்படி கொள்க)

அர்ஜுனன்–"கண்ணு! இந்த மூன்று அதிகாரிகள் செல்லும் மார்க்கத்தில் வாசி உண்டா? இருந்தால் யார் யாருக்கு என்ன மார்க்கம்?" என்ருன்.

பகவான்–பாண்டவ! அர்ச்சிராதி மார்க்கம், துமாதி மார்க்கம் என்று இரண்டு மார்க்கங்கள் உள்ளன. இவை உபநிஷத் ப்ரசித்தமானவை. ஒன்றுக்கு சுக்ல மார்க்கம் என்றும், மற்றது கிருஷ்ண மார்க்கம் என்றும் பெயர். அர்ச்சிராதி மார்க்கத்தில் சுக்லபக்ஷம் சேர்ந்திருக்கிறபடியால் அதற்கு "சுக்ல மார்க்கம்" என்று பெயர். அந்த மார்க்கத்தில் செல்பவன் வெள்ளை மனம் பெற்றவனுய், பரம ஸாத்துவிகனுய் இருப்பதாலும் அதற்கு 'சுக்ல–வெளுத்த மார்க்கம்' என்ற பெயர் ஏற்பட்டிருக்கலாம். அந்த வழியில் செல்பவனே அந்த மார்க்கம் பரமபதம் அடையச் செய்கிறது. மறுபடி திரும்பாமற் செய்து பரம ச்ரேயஸ்ஸையும் அடையச் செய்கிறது. ஆகையினுலும் அதற்கு 'சுக்ல மார்க்கம்' எனப் பெயர் வழங்கி வருகிறது.

தூமாதி மார்கத்தில் கிருஷ்ணபக்ஷம் சேர்ந்திருக்கிற படியால் அதற்குக் "கிருஷ்ண மார்க்கம்" என்று பெயர். அதில் செல்பவன் அசுத்தஞக இருக்கிறபடியாலும், அந்த மார்க்கம், தன்மூலம் செல்பவனுக்கு மறுபடி பிறப்பு முதலியவற்றைத் தருகிறபடியாலும் அதற்குக் 'க்ருஷ்ண கறுத்த மார்க்கம்" எனப் பெயர் வழங்கி வருகிறது.

அர்ஜுனன்–"அர்ச்சிராதி மார்க்கம் என்ற பெயர் ஏற்படக் காரணம் என்ன?" என்ருன்.

பரந்தாமன்–பார்த்த! இந்த மார்க்கத்தில் அர்ச்சிஸ்–அக்கினி என்ற தேவதை முதல் இடம் பெற்றிருபதனுல் இந்த மார்க்கத்திற்கு 'அர்ச்சிராதி–அர்ச்சிஸ்ஸை முதலில் கொண்ட சொர்க்கம்' என்று பெயர்.

இந்த மார்க்கத்தில், அர்ச்சிஸ்(அக்கினி), பகல், சுக்லபக்ஷம், உத்தராயணம், வாயு ஸூர்யன், சந்திரன், மின்னல் புருஷன், வருணன், இந்திரன், பிரமன் என்ற ஆதிவாஹகர்கள்–அந்த மார்க்கத்தில் செல்பவர்களே நன்ருக உபசரித்து வழி நடத்துபவர். அக்கினி முதலில் சப்தங்கள் அக்கினி தேவதை முதலியவற்றைக் குறிக்கின்றன. இவர்களில் வித்யுத்புருஷனே பரமாத்மாவை அடைபவர்களே ஸாக்ஷாத்தாகப் பரமனிடம் சேர்ப்பவன். வருணன், இந்திரன், பிரமன் ஆகிய மூவரும் அவரவர் எல்லேயில் மின்னல் புருஷனுக்கு துணேப் புரிகின்றனர். இந்த வழியாலே செல்பவனுக்கு மறுபிறவி கிடையாது.

விஜயன்– "ஸுசீலா! தூமாதி மார்க்கம் என்ற பெயர் ஏற்பட்டதற்கு என்ன காரணம்? அதன் விசேஷ அம்சங்கள் யாவை?" என்ருன்

கிருஷ்ணன்–கௌந்தேய! இந்த மார்க்கத்தில் தூமம் முதலில் இருப்பதனுலதர்க்கு அந்தப் பெயர். இந்த மார்க்கத்தில் தூமம், ராத்திரி, கிருஷ்ணபக்ஷம், தக்ஷிணுயனம், பித்ருலோகம், ஆகாயம் என்பவை உள்ளன. புண்ணியகர்மாவை செய்பவர் இந்த வழியால் ஸ்வர்க்கம் சென்று மீண்டும் பூலோகத்துக்குத் திரும்புவர்.

இந்த இரு மார்க்கத்திலும் காலாபிமானி தேவதைகள் பலர் இருப்பதால்

அந்த மார்க்கங்களையே காலம் என்று கூறியுள்ளேன். இந்த இரண்டையும் தெளிவாக அறிபவனுக்கு கலக்கம் கிடையாது. இதை நன்றாக அறிந்தால் தூமாதி மார்க்கத்திலுள்ள தோஷமும், அர்ச்சிராதி மார்க்கத்திலுள்ள குணமும் புலப்படும். அதனால் எப்பொழுதும் அர்ச்சிராதி மார்க்க சிந்தனத்தைப் பக்திக்கு அங்கமாகச் செய்ய வேண்டும். ப்ரபன்னனும் ஸ்வயம் ப்ரயோஜனமாக அநுஸந்திப்பது நல்லது.

விஜய! ஏழு, எட்டு அத்தியாயாங்களில் கூறிய பகவானுடைய பெருமைகளை அறிபவன் உயர்ந்த சுகத்தை பெறுவான். வேதாப்பியாஸாம், ய்ஜ்ஞம், தவம், தனம் முதலிய புண்ணியங்களால் ஏர்ப்படும் பலனை விட சிறந்த பலனை பெறுவான். அவற்றால் ஏர்ப்படும் பலனை புல்லுக்கு சமமாகக் கருதுவான்.

இவன் பக்தியோக நிஷ்டனாக ஆவான். ஜ்ஞானிக்குக் கிடைக்கக்கூடிய சிறந்ததான அநாதியான வைகுண்டத்தை அடைந்து பெறு வாழ்வு பெறுவான்

எட்டாம் அத்தியாயம் பரம ஸாரம் முற்றும்